Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 171/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பாலகிருஷ்ணன் |
| Father's Name | – | வெங்கிடுசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A2 present.A1 absent. 317 petition filed and allowed. A1,A2 counsels are present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது ஜக்கார்பாளையத்தில் குடியிருந்து கொண்டு அலாய்ஸ் கம்பெனி வைத்து நடத்தி வருகிறேன். 23.06.2016 ம் தேதி மாலை 3.30 மணியளவில் எனது கம்பெனியில் இருந்து பேனல் போர்டு காப்பர் மற்றும் டிரான்ஸ்பார்மரை உடைத்து காப்பரை எடுத்துச் சென்றுவிட்டார்கள். நான் உள்ளே சென்று பார்த்தேன். அப்போது காப்பர் திருடு போனது தெரியவந்தது. பின்னர் மேற்படி சம்பவம் குறித்து நெகமம் காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். அந்த புகார் **அசாஆ. 1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பேனல் போர்டு எனது நிறுவனத்தின் உள்ளே இருந்தது. எனது நிறுவனத்தின் கதவில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. 23.06.2016 ம் தேதி எந்த நேரத்தில்புகார் அளிக்க காவல்நிலையம் சென்றேன் என்றால் மாலை சுமார் 5.30 மணியிருக்கும். மறுநாள் காலை 10 மணியளவில் போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்தார்கள். உடைக்கப்பட்ட பூட்டினை போலிசார் பார்த்தார்கள். பூட்டை போலிசார் கைப்பற்றினார்கள், கைரேகை எடுக்கவில்லை.

புகார் கொடுக்க என்னுடன் முத்துக்குமார், சந்திரசேகர் ஆகியோர் காவல்நிலையம் வந்தார்கள். திருட்டுப் போன பொருட்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 171/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சந்திரசேகரன் |
| Father's Name | – | வெங்கிடுபதி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A2 present.A1 absent. 317 petition filed and allowed. A1,A2 counsels are present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோவை கணபதியில் குடியிருந்து கொண்டு ஜக்கார்பாளையத்தில் அலாய்ஸ் கம்பெனி வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 18.06.2016 ம் தேதி மாலை 4 ல் இருந்து 5.30 மணிக்குள் முதலில் அசா.1 எனது மாமா அவரது நிறுவனத்திற்குச் சென்று பார்த்தபோது பேனல் , டிரான்ஸ்பார்மரில் உள்ள காப்பரைக் காணவில்லை. இது குறித்து அசா.1 எனக்கு அலைபேசி மூலம் தகவல் கூறினார். நானும் சம்பவ இடம் சென்று பார்த்தேன். பேனல் போர்டிலும், டிரான்ஸ்பார்மரின் உள்ளேயும் காப்பர் இல்லாமல் இருந்தது. பின்னர் நெகமம் காவல்நிலையத்திற்குஅலைபேசி மூலம் தகவல் கூறினோம்.

போலிசார் 1 மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார்கள். பின்னர் 23.06.2016 ம் தேதி காவல்நிலையத்திற்குச் சென்று புகார் அளித்தோம். பின்னர் ஒரு மாதம் கழித்து ஆஜர் எதிரியை கைது செய்ததாகக் கூறினார்கள். களவு போன பொருட்களை கைப்பற்றியதாக போலிசார் கூறினார்கள். பின்னர் நீதிமன்றத்தில் பொருட்களை வாங்குவதற்கு மனு தாக்கல் செய்தோம். அதன் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து போலிசார் களவு போன பொருட்களில் பாதியை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

18.06.2016 ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். உடைந்த பூட்டை போலிசார் கைப்பற்றவில்லை. சம்பவ இடத்தில் வைத்து 23 ம் தேதி புகார் அளித்த பின்பு கைரேகை எடுத்தனர். களவு போன பொருட்களில் எனக்கும் உரிமை உள்ளது. காணாமல் போன அடுத்த நாள் புகார் அளிக்கத் தோன்றியது. புகார் அளிக்க நான் , பாலகிருஷ்ணன், முத்துக்குமார் ஆகியோர் சென்றோம். புகாரில் அச.1 மட்டுந்தான் கையொப்பம் இட்டேன். புகாரை நான் படித்துப் பார்த்தேன். முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைத்தான் புகாரிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

23 ம் தேதி காலை 11 மணிக்கு காவல்நிலையம் சென்று புகார் அளித்தோம். 24 ம் தேதிதான் காலை 10 மணிக்குபோலிசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டனர். மதியம் 1 மணி வரை போலிசார் சம்பவ இடத்தில் இருந்தனர். களவு போன பொருட்கள் எந்த தேதியில் கண்டுபிடிக்கப்பட்டது என்று குறிப்பாகக் கூற இயலாது. காணாமல் போன பொருட்களை காவல்நிலையத்தில் வைத்துதான் அடையாளம் காட்டினோம், அது எந்த தேதி என்று என்னால் கூற இயலாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் பகுதி பொருட்கள்தான் கிடைத்தது, பகுதி பொருட்கள் கிடைக்கவில்லை என கூறவில்லை.

என்னிடம் கொடுத்த களவு போன பொருட்கள் பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. இவ் வழக்கு தொடர்பாக என்னை 5 முறை விசாரணை செய்தார்கள். நான் தற்போது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். களவு போன பொருட்களின் மதிப்பு சுமார் 25 லட்சம் ஆகும். போலிசாரிடம் மேற்படி விபரத்தைக் கூறினேன். மேற்படி களவு போன பொருட்களின் மதிப்பு ரூ.25 லட்சம் என்று அசா.1, நான் மற்றும் பட்டியல் சாட்சி 3 ஆகிய எங்கள் 3 பேருக்கும் தெரியும்.

பட்டியல் சாட்சி.4 எனது தாயார், 5,6 எனது உறவினர் ஆவர். எங்கள் நிறுவனத்திற்கு அருகில் எங்கள் வீடு மற்றும் தோட்டம் உள்ளது.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B .A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 171/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஜெகன்பாபு |
| Father's Name | – | உத்தமராஜ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A2 present.A1 absent. 317 petition filed and allowed. A1,A2 counsels are present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கோவை சேரன் மாநகரில் குடியிருந்து கொண்டு 4 சக்கர வாகனம் விற்பனை செய்துவருகிறேன். நான் 23.06.2016 ம் தேதி ஜக்கார்பாளையத்தில் உள்ள எனது அண்ணன் சந்திரசேகரன் நிறுவனத்திற்கு சென்றிருந்தேன். நிறுவனத்தில் காப்பர்,காயில் ஆகியவை இல்லை என கூறி அன்று மாலை காவல்நிலையம் சென்று தகவல் தெரிவித்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல்நிலையத்திற்கு மாலை சுமார் 5.30 மணியளவில் நான் , பாலகிருஷ்ணன், சந்திரசேகரன் மற்றும் முத்துக்குமார் ஆகியோர் சென்றோம். போலிசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B .A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 171/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பாலச்சந்திரர் |
| Father's Name | – | வெங்கிடாச்சலம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A2 present.A1 absent. 317 petition filed and allowed. A1,A2 counsels are present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது ஜக்கார்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்துவருகிறேன். அலாய்ஸ் கன்பெனியின் பக்கத்து காடு என்னுடைய காடு ஆகும். 18.06.2016 ம் தேதி நான் மாலை சுமார் 5.30 மணியளவில் காட்டிற்குச் சென்றேன். அங்கு கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தேன். நிறுவனத்தின் உள்ளே பேனல் போர்டு, டிரான்ஸ்பார்மல் கழட்டி போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்தேன். கடந்த 23.06.2016 ம் தேதி நான் , பாலகிருஷ்ணன், ஜெகன்பாபு, சந்திரசேகரன், குமார் மற்றும் பலர் காவல்நிலையம் சென்றோம். சம்பவம் குறித்து தகவல் தெரிவித்தோம். போலிசார் புகார் எழுதினார்கள். புகார் யார் கொடுத்தார்கள் யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

23.06.2016 ம் தேதி காவல்நிலையத்திற்கு காலை சுமார் 10.30 மணியளவில் சென்றோம். சுமார் 1 மணி நேரம் காவல்நிலையத்தில் இருந்தோம்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.